

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 199 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 17 – ஞாயிற்றுக்கிழமை 01 மார்ச் 2026 – மதுரை 76 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 199 : Thiruvalluvar Year - 2057 - Maasi 17 - Sunday 01 March 2026 - Madurai 76 Pages ₹ 5.00


## ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

# இன்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் 73-வது பிறந்த நாள்!

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை!

**சென்னை, மார்ச் 1 -**

**“ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்” - இன்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73-வது பிறந்த நாள். இதனையொட்டி தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.**

தலைவர் கலைஞர் - அன்னை தயாளு அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்து; பொதுவுடைமைப் பூமியாம் சோவியத் நாட்டின் சுடரொளி ‘ஸ்டாலின்’ அவர்களின் பெயர் சூட்டப்பட்டு, கொள்கைக் கோட்டமாம் கோபாலபுரத்தில் வளர்ந்து, இளமையிலேயே இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தை நோக்கி இளைஞர்களைத் திரட்டிடும் இனிய பணியைச் சுமந்து, கடந்து வந்த மேடு - பள்ளங்களைச் சமமாகப் பாவித்து ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு; தலைவர் கலைஞர் அவர்களிடம் பயின்ற பண்புகளோடும், கடமை உணர்வோடும் கழகத்தைக் கண்களாகவும் தலைவர் கலைஞர் அவர்களைக் கதிரொளியாகவும் கொண்டு, இயன்ற வரை எல்லோருக்கும் பயனுள்ள வகையில், கனிவு - துணிவு ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு, தொண்டூழியம் ஆற்றி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (மார்ச் - 1) 73-ஆவது பிறந்த நாள்!



இதனையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டிருந்த அறிக்கையில்,

“பிறந்த நாளையொட்டி, சமுதாயத்தில் மெலிந்து நலிந்த பிரிவினரான ஏழை எளிய மகளிர், முதியோர், ஆதரவற்றோர், திருநர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் நலன் பேணும் வகையில் இயன்ற உதவிகளைச் செய்வது; கழகக் கொடிகளைப் புதுப்பிப்பது - புதிய கொடிகளை ஏற்றி வைப்பது - கிளைக் கழகங்களின் பெயர்ப் பலகைகளைப் புதுப்பிப்பது - பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களில் அமைந்துள்ள படிப்பகங்களுக்குப் பயனுள்ள புதிய நூல்களை வழங்குவது, கழகத்தின் மூத்த உறுப்பினர்களைச் சிறப்பிப்பது, பெருவாரியாக ரத்த தானம் செய்வது போன்றவற்றை ஆற்றுவதுமே அவசியமானவை. இயக்கத்திற்கு ஆக்கமளித்திடும் இத்தகைய செயல்பாடுகளை மட்டுமே நான் பெரிதும் வரவேற்கிறேன்; சமூக உணர்வும், இயக்கப் பற்றும் மிளிரும் இத்தகைய நற்செயல்கள் எல்லா இடங்களிலும் நிகழுமானால், அவற்றையே என்னரும் தோழர்களின் இதய வாழ்த்துகளாகக் கொண்டு பெருமகிழ்ச்சி கொள்வேன்!

ஆடம்பரத்தைத் தவிர்த்து ஆக்கப்பூர்வமான பணிகளை அமைதியாக மேற்கொள்வீர்! இந்த எனது அன்பு வேண்டுகோளை எல்லோரும் நினைவில் கொள்வீர்!” என்று கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் கழகத் தோழர்கள் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை ஆடம்பரமின்றி கொண்டாடுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்,

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.3.2026) தமது பிறந்தநாளையொட்டி காலை 8 மணியளவில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்திலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திலும், 8.30 மணியளவில் தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்திலும், மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

பின்னர் 9 மணியளவில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கழகத்தினரிடம் வாழ்த்துப் பெறுகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர்

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

**73வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள்**

**1–3–2026**

| | | | |
|---|---|---|---|
| காலை | 8.00 மணி | – | பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல். |
| ” | ” | – | முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல். |
| ” | 8.30 மணி | – | தந்தைபெரியார் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்தல். |
| ” | 9.00 மணி | – | அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம் – வாழ்த்து பெறுதல். |

– தலைமைக் கழகம்

## சமரசமும் சமத்துவமும்தான் ஆன்மீகப் பாதையாக இருக்கமுடியும்!

# மக்களைப் பிரிக்க நினைக்கும் கும்பலைப் புறக்கணிப்பீர்!

## கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 1-**

**கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “சமரசமும் சமத்துவமும்தான் ஆன்மீகப் பாதையாக இருக்கமுடியும்” என்றும் மக்களைப் பிரிக்க நினைக்கும் கும்பலைப் புறக்கணிப்பீர்” என்றும் வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.2.2026) சென்னை, மயிலாப்பூர், ஆர்.கே. மடம் சாலை, கபாலீசுவரர் திடலில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

உங்களையெல்லாம் ஒருசேர பார்க்கும்போது, மனதில் பெரு மகிழ்ச்சி பெருக்கெடுக்கின்றது. நம்முடைய திராவிட மாடல் ஆட்சிப் பற்றி நாம் சொல்வது எல்லாருக்கும் எல்லாம் அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா!

“எல்லாருக்கும் எல்லாம்” என்று நாம் சொல்வது, வாய் வார்த்தைக்காக அல்ல; சொற்களில் சொல்வதை, செயலில் நிரூபிக்கிறோம் என்பதற்கான அடையாளம்தான் இந்த மாநாடு!

உண்மையான ஆன்மீக அன்பர்களும், இறை பற்றாளர்களும் விரும்பக்கூடிய அரசுதான், திராவிட மாடல் அரசு! இந்த மாநாட்டைப் பார்க்கும் போது, பலருக்கு வியப்பாக இருக்கலாம்; ஏன், சிலருக்கு எரிச்சல்கூட வரலாம். கிராம கோயில்களில் பணியாற்றுகின்ற கிராமப் பூசாரிகளான நீங்களும் இந்த சமுதாயத்தில் ஒரு அங்கம்தான். உங்களுடைய வாழ்விலும், விடியல் ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான், நம்முடைய அரசு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த மண்ணில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்களுடைய உரிமைகளை நிலைநிறுத்திய திராவிட இயக்கத்தின் உணர்வை, நம்முடைய அரசில்தான் நிலைநாட்டியிருக்கிறோம்.

ஒருகாலத்தில், கோயில் இருக்கின்ற தெருக்களில் கூட பலரால் நுழைய முடியாத நிலைதான் இருந்தது; அதை மாற்றி, இன்றைக்கு கோயில்களுக்குள்ளே அனைத்து மக்களும் வரலாம்; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்; அன்னைத் தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்று மாற்றியிருக்கிறோம். இந்த மாற்றம்தான், நாம் விரும்புகின்ற சமூக முன்னேற்றம்! இதைத்தான் உண்மையான இறைப் பற்றாளர்களும் விரும்புவார்கள். இறை நம்பிக்கையை பொறுத்தவரைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு என்பது, “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று திருமூலர் சொன்ன வழிதான் என்று பேரறிஞர் அண்ணா சொல்லியிருக்கிறார்.

### அனைவரது உரிமைகளையும் பாதுகாக்கும் அறநிலையத் துறை!

அதேபோலதான், தலைவர் கலைஞர் அவர்களும், “கோயில்கள் கூடாது என்பதல்ல; அவை கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது” என்று சொல்லியிருக்கிறார். அந்த வழியில் தான், அனைவருக்கும் மதிப்பளிக்கும், அனைவரது மாண்பையும் காக்கும், அனைவரது உரிமைகளையும் பாதுகாக்கும் துறையாக, நம்முடைய அறநிலையத்துறை செயல்பட்டு வருகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று (28.02.20126) இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, பூசாரிகளுக்கு பூசை உபகரணங்களை வழங்கினார். இம்மாநாட்டில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், திருபெரும்புதூர் ஜீயர் தவத்திரு இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிறப்பாக, வேகமாகச் செயல்படுகிறார் சேகர்பாபு!

இன்னும் சொல்லப்போனால், கடந்த ஆட்சிக் காலங்களில், அறநிலையத் துறை அமைச்சர் யார் என்பதுகூட மக்களுக்கு நினைவில்

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்